முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1555

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**01.01.2024**, திங்கட்கிழமை

1. குருராஜனே ஆறுமுக அரங்கனே
குருபரன் என் வடிவான ஞானதேசிகனே
திருவருள் தனை உலகோர் இலகுவாய் அடைய
தெய்வநெறி காட்டுகின்ற ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் மார்கழி மாதம் 16 ம் நாள், 01.01.2024, திங்கட்கிழமை)
வரமென சோபகிருது சிலை திங்கள்
வல்லமை கூடிட அரங்கனுக்கு எடுத்துரைப்பேன்
3. உரைக்கவே அரங்கன் தர்மம் தான்
உலகத்தை ஆளுவது உறுதிஉறுதி
குறைவின்றி அரங்கன் தொண்டர்கள் தான்
குவலயத்தை ஆட்சி புரிவதும் உறுதிஉறுதி
4. உறுதி தந்து ஆறுமுகப்பெருமான் யானும்
உயர்வாக அரங்கனோடு இணைந்து நிற்க
கருதி அரங்கனைத் தேடி வந்து
கலியுகத்தார் தீட்சை ஏற்றால் போதும்
5. போதுமப்பா அனைவருக்கும்
புகலுவேன் ஆறுமுகன் என் அருட்காட்சி உறுதியாகி
வகைபட இந்த பேருலகம் எங்கும்
வல்லமையான மக்களெல்லாம் ஞானிகளாக
6. வருங்காலம் அரங்கனால் தேர்ச்சி பெற பெற்று
அரங்கனால் தேர்வு செய்யப்பெற்று
பெற்றுமே இந்த பேருலகம்
பிசகின்றி அரங்கனோடு முழுமையாய்

7. ஞானிகள் படைகளாக
ஞானவான்கள் படைகளாக நிரம்பி
ஞான ஆட்சி இந்த நல்லுலகம் அடையக்கூடும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—